# தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற சாரதிகளுக்கான அறிவுறுத்தல்கள்.

1. 2020.08.05 ஆம் திகதி நடாத்தப்படவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலின்போது போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களின் வேண்டுகோளுக்கமைய கொழும்பு ஒதுக்குக் குழாமிலிருந்து வாகனங்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. தேர்தல் கடமைகளுக்காக தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு வாகனங்களை விடுவிக்கும்போது அந்த வாகனங்கள் மற்றும் சாரதிகள் சம்பந்தமான பொறுப்புக்கள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரிடம் ஒப்படைக்கப்படும். வாக்கெடுப்புக் கடமைகளிலிருந்து விடுவிக்கப்படும் வரை இந்த விதிமுறை செயல்வலுப்பெறுவதுடன் அந்த சாரதிகள் தேர்தல் ஆணையாளர் நாயகம் அல்லது அவரால் அதிகாரம் ஒப்படைக்கப்படும் அலுவலரின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

3. தேர்தலுக்காக விடுவிக்கப்படும் வாகனங்களின் சாரதிகள் அந்தக் கடமைக்குச் செல்வதற்கு முன்னர் வாகனத்தின் ஓட்ட நிலைமை சம்பந்தமாக பரீட்சித்து உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

4. தேர்தல் கடமைகளுக்காக தமது நிரந்தர சேவை நிலையத்திலிருந்து வாகனம் வெளியேறுவதற்கு முன்னர் வாகனம் சொந்தமான நிறுவனத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பயணங்களுக்கான ஓட்டங்களை ஓட்டக் குறிப்பில் உள்ளடக்கி அக்குறிப்பை சீர்படுத்தி மீதி எரிபொருள் அளவுக்கேற்ப தேர்தலுக்காக செல்ல வேண்டிய இடத்திற்கு பயணிப்பதற்கு தேவையான அளவு எரிபொருளை மாத்திரம் அந்த நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் எரிபொருளுக்கான செலவை தேர்தலின் பின்னர் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு மீளச் செலுத்தப்படும்.

5. தமது வசிப்பிடத்திற்கு வெளியே சில தினங்கள் கடமையிலீடுபட வேண்டியேற்படுவதனால் அக்காலப்பகுதிக்குத் தேவையான தனிப்பட்ட பொருட்களை (மருந்துகள், ஆடைகள், சவற்காரம், பற்பசை மற்றும் கட்டில் விரிப்புக்கள்) கொண்டு செல்லுதல் வேண்டும்.

6. தேர்தல் கடமைகளுக்காக விடுவிக்கப்பட்டு அக்கடமைகள் நிறைவுபெற்றதன் பின்னர் தனது நிரந்தர சேவை நிலையத்திற்கு சமுகமளிக்கும் வரையிலான காலப்குதியினுள் நிகழும் விபத்துக்கள், அனர்த்தங்கள் பற்றி தனது நிறுவனத் தலைவருக்கு மற்றும் தேர்தலுக்காக இணைக்கப்பட்டுள்ள மாவட்டத்தின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) / உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். அத்துடன் கொழும்பு ஒதுக்குக் குழாமிலிருந்து விடுவிக்கப்பட்ட வாகனமொன்றாயின் தேர்தல் ஆணைக்குழுவிற்கும் அறிவித்தல் வேண்டும். அவர்களது அறிவுறுத்தலின் பிரகாரம் பழுதுபார்ப்பு அல்லது அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் தேர்தல் கடமைகளில் நீங்கள் ஈடுபடும் சந்தர்ப்பங்களின்போதும் போக்குவரத்துக் கட்டளைச் சட்டத்தின் மற்றும் சிவில் சட்டத்தின் விதிமுறைகளுக்குக் கீழ்படிதல் வேண்டும். அதனால் விபத்தொன்றின்போது உடனடியாக அருகிலிருக்கும் பொலீஸ் நிலையத்திற்கு கட்டாயம் அறிவித்தலும் வேண்டும்.

7. தேர்தல் கடமைகளின்போது பயன்படுத்திக் கொள்ளப்படும் வாகனங்களில் சட்டவிரோதமான பொருட்களை ஏற்றுதல் அல்லது அவற்றை எடுத்துச் செல்லக்கூடாது. அத்துடன் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்கள் தவிர ஏனையோரை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு செல்லக்கூடாது. பயணிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள இடத்திற்கு மிகக் குறுகிய பாதையைப் பயன்படுத்தி பயணித்தல் வேண்டும். வீதி நெரிசல் போன்ற சந்தர்ப்பங்கள் தவிர வேறு மாற்று வழிகளை பயன்படுத்தல் அல்லது மேலதிகப் பயணத்தை மேற்கொள்ளக்கூடாது.

8. கொழும்பு ஒதுக்குக் குழாமிலிருந்து வெளி மாகாணங்களுக்கு அனுப்பப்படும் வாகனங்கள் தேர்தல் கடமை முடிவடைந்து திரும்பிவரும்போது கடமையிலீடுபட்ட மாவட்டத்தின் போக்குவரத்து அலுவலர்களின் அறிவுறுத்தல் பிரகாரம் தேர்தல் கடமைகளிலீடுபட்ட அலுவலர்களை ஏற்றிச்செல்லுதல் வேண்டும். வேறு எந்தவொரு நபரையும் தேர்தல் கடமை காலப்பகுதிக்குள் வாகனத்தில் ஏற்றக்கூடாது.

9. தேர்தல் கடமைகளுக்காக விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பம் முதல் மீண்டும் நிரந்தர சேவை நிலையத்திற்கு வரும்வரையிலான காலப்பகுதி அனைத்து சாரதிகளும் தேர்தல் கடமையிலீடுபட்ட காலப்பகுதியாகக் கருதப்படும். அதனால் அக்காலப்பகுதியினுள் பொதுவான கடமையில் ஈடுபடும்போது அனைத்து நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் செயல்வலுப்பெறும். விஷேடமாக மதுபோதையில் வாகனத்தைச் செலுத்துதல் அல்லது மது அருந்தியிருத்தல், பண்பற்ற விதத்தில் நடந்துகொள்ளல் சம்பந்தமாக மிகக்கூடிய கவனம் செலுத்தப்படும்.

10. சாரதியொருவர் மது அருந்தியுள்ளாரென தெரியவரின் அந்தச் சாரதி கொண்டுவந்த வாகனத்தை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) பொறுப்பேற்றுக்கொள்வதுடன் எக்காரணத்தினாலும் அந்த வாகனச் சாரதியிடம் மீளக் கையளிக்கப்பட மாட்டாது. இது தொடர்பாக வாகனம் சொந்தமான நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டு அதனை எடுத்துச் செல்வதற்கு பிறிதொரு சாரதியை அனுப்புமாறு அறிவிக்கப்படும்.

11. தேர்தல் கடமையில் ஈடுபடும் மொத்தக் காலப்பகுதிக்கும் பிழைப்புக் கொடுப்பனவு செலுத்தப்படும். உங்களுக்குரிய உணவு, பானங்களைப் பெற்றுக்கொள்வதற்கே இக்கொடுப்பனவு செலுத்தப்படுகிறது.

12. அனைத்து சாரதிகளும் “ஒதுக்குக் குழாம் வாகனங்களை தேர்தல் கடமைகளில் பயன்படுத்திக் கொள்ளல் பற்றிய விபரப் பத்திரம்” (V-7) எனும் படிவத்தின் இரண்டு பிரதிகளை நிரந்தர கடமை நிலையத்தினால் பூரணப்படுத்தி தேர்தல் கடமைகளுக்காக இணைக்கப்பட்டுள்ள மாவட்டத்தின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் (போக்குவரத்து) கையளித்து அவருடாக “ஆ” பகுதியைப் பூரணப்படுத்தி அதில் ஒரு பிரதியை மீண்டும் தனது சொந்த கடமை நிலையத்தின் உரிய அலுவலரிடம் கையளித்தல் வேண்டும். அதில் அடங்கியுள்ள விபரங்கள் உங்களது மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு மற்றும் இணைந்த படிகளைச் செலுத்தும்போது கட்டாயமாக உங்களுடைய நிரந்தர கடமை நிலையத்திற்குக் கிடைத்திருத்தல் வேண்டும்.

13. மேலே 12 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்துக்கு மேலதிகமாக தேர்தல் கடமைகள் நிறைவுபெற்று குறிப்பிட்ட மாவட்டத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் தேர்தல் கடமையில் ஈடுபட்டமையை உறுதிப்படுத்துவதற்கான வரவுச் சான்றிதழை (CE 51 பத்திரம்) உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து (போக்குவரத்து) பெற்றுக்கொள்ள வேண்டும். கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக இந்த வரவுச் சான்றிதழை மேலதிக நேர வேலை / இணைந்த படிகள் வவுச்சர்களுடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

14. மேலும் உங்களுடைய வாகனத்துடன் தொடர்புடைய ஓட்டக் குறிப்புக்கள், தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட கி.மீற்றர்களின் எண்ணிக்கை மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருளின் அளவு ஆகிய விடயங்களை உள்ளடக்கி சீர்செய்து உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) அல்லது வேறு அதிகாரம் பெற்ற அலுவலரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரையைப் பொறித்து உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

15. மேலும் கொவிட் தொற்றுநோய் நிலைமையின் கீழ் தேர்தலை நடாத்துதல் சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி அலுவல்களை மேற்கொள்வதற்கு அனைத்து தேர்தல் பணியாட் குழுவினரும் கடமைப்பட்டிருப்பதனால் தாங்களும் உரிய தெரிவத்தாட்சி அலுவலர் / உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியோரால் வழங்கப்படும் அந்த அறிவுறுத்தல்களையும் கட்டாயம் பின்பற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க,**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,**
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை, இராஜகிரிய.

2020.07.09

**V-7**

**ஒதுக்குக் குழாம் வாகனங்களை தேர்தல் கடமைகளில் பயன்படுத்திக் கொள்ளல் பற்றிய விபரப் பத்திரம்.**

வாகனம் சொந்தமான நிறுவனத்தின் போக்குவரத்து அலுவலரால் 03 பிரதிகளில் பூரணப்படுத்தி அதில் 02 பிரதிகளை இணைக்கப்படும் மாவட்டத்தின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் (போக்குவரத்து) கையளிப்பதற்காக சாரதியிடம் ஒப்படைக்கவும். 03 ஆவது பிரதியை வாகனம் செந்தமான நிறுவனத்தின் அலுவலகப் பிரதியாக வைத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| 1. வாகனம் உரித்துடைய திணைக்களம் /அமைச்சு / கூட்டுத்தாபனம்: | 2. வாகன இலக்கம்: |
| 3. சாரதியின் பெயர்: | |

| 4. வாகனத்தின் வகை(உரிய கூட்டினுள் x அடையாளமிடவும்.) | | | | | | | | 5. பயன்படுத்தப்படும் எரிபொருள் (உரிய கூட்டினுள் x அடையாளமிடவும்.) | | | | 6. எரிபொருள் தாங்கியின் கொள்ளளவு | | 7. 1 லீற்றர் எரிபொருள் மூலம் ஓட முடியுமான கி.மீ அளவு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜீப் | | கெப் | | வேன் | | கார் | | பெற்றோல் | | டீசல் | | லீட்டர் | | கி.மீ. | |

| | | |
|---|---|---|
| 8. தேர்தல் கடமைக்காக இணைக்கப்பட்ட மாவட்டம் | 10. உங்களுடைய நிறுவனத்தினால் வழுங்கப்பட்ட எரிபொருளின் அளவு லீற்றர் : | 11. வாகனம் கடமைக்காக வெளியேறிச் செல்லும் சந்தர்ப்பத்தில் மைலோ மீற்றரின் வாசிப்பு : |
| 9. தேர்தல் கடமைகளுக்காக வாகனம் விடுவிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் : | 12. அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை : | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2020 | 08 | | மு.ப | பி.ப |

**“ஆ” பகுதி - இணைப்புச் செய்யப்பட்டுள்ள மாவட்டத்தின் உபயோகத்திற்காக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. மேற்குறிப்பிடப்பட்ட வாகனம் வந்த திகதி மற்றும் நேரம் | 2020 | 08 | | மு.ப | பி.ப |
| 2. வாகனம் மாவட்டத்திற்கு வந்த சந்தர்ப்பத்தில் மைலோ மீற்றரின் வாசிப்பு | | | | | |

| | | |
|---|---|---|
| 3. தேர்தலின்போது ஈடுபடுத்திய கடமை (உரிய கூட்டினுள் x அடையாளம் இடுக.) | வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவின் போக்குவரத்துக்காக | |
| | வலயத்திற்கு பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் போக்குவரத்துக்காக | |
| | வேறு | |

| | | | |
|---|---|---|---|
| 4. மாவட்டத்தினுள் ஓடுவதற்காக வழங்கப்பட்ட எரிபொருள் அளவு (லீற்றர்) | | 5. மாவட்டத்தினுள் ஓடியுள்ள கி.மீற்றரின் அளவு | |
| 6. மீண்டும் அலுவலகத்திற்குச் செல்வதற்கு வழங்கப்பட்ட எரிபொருளின் அளவு (லீற்றர்) | | 7. மீண்டும் அலுவலகத்திற்குச் செல்வதற்கான தூரம் (சுமார் கி.மீ). | |
| 8. வழங்கப்பட்ட மொத்த எரிபொருளின் அளவு | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. வாகனத்தை மாவட்டத்திலிருந்து விடுவித்த திகதி மற்றும் நேரம் | 2020 | 08 | | மு.ப | பி.ப |
| 10. வாகனம் விடுவிக்கப்படும்போது மைலோ மீற்றரின் வாசிப்பு. | | | | | |

திகதி : 2020.08.

..........................................................................

உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து)

**உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து)** :- தேர்தல் கடமைகள் நிறைவுபெற்றதன் பின்னர் ***மூலப் பிரதியில் “ஆ” பகுதியைப் பூரணப்படுத்தி மீளக் கொண்டு செல்வதற்காக சாரதியிடம் கையளிக்கவும்***. சாரதியின் பயணச் செலவுகளுக்கான வவுச்சருடன் மூலப் பிரதியை இணைத்து சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அதன் போட்டோ பிரதியை எரிபொருள் மீளளிப்பு விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.